*World Christian Fellowship*
*www.wcflondon.com*
*wcflondon@gmail.com*

# இயேசுவின் ஊழியத்தில் சரியான நபர்கள்

***மத்தேயு 4:18-22, இயேசு கலிலேயாக் கடலோரமாய் நடந்துபோகையில், மீன்பிடிக்கிறவர்களாயிருந்த இரண்டு சகோதரராகிய பேதுரு என்னப்பட்ட சீமோனும், அவன் சகோதரன் அந்திரேயாவும், கடலில் வலைபோட்டுக்கொண்டிருக்கிறபோது, அவர்களைக் கண்டு: 19. என் பின்னே வாருங்கள், உங்களை மனுஷரைப் பிடிக்கிறவர்களாக்குவேன் என்றார். 20. உடனே அவர்கள் வலைகளை விட்டு, அவருக்குப் பின்சென்றார்கள். 21. அவர் அவ்விடம் விட்டுப் போகையில், வேறே இரண்டு சகோதரராகிய செபெதேயுவின் மகன் யாக்கோபும், அவன் சகோதரன் யோவானும் தங்கள் தகப்பன் செபெதேயுவுடனே படவிலிருந்து, தங்கள் வலைகளைப் பழுதுபார்த்துக்கொண்டிருக்கிறபோது, அவர்களைக் கண்டு, அவர்களையும் அழைத்தார். 22. உடனே அவர்கள் படவையும் தங்கள் தகப்பனையும் விட்டு, அவருக்குப் பின் சென்றார்கள்.***

*வேதாகமத்தில் இவர்களே முதல் மீட்புக் குழுவினர்கள். பிரதான கட்டளையை முதலில் நிறைவேற்றும் பணியில் சுவிசேஷத்தை அறிவிக்க புறப்பட்ட முதல் கூட்ட அப்போஸ்தலர்களாகவும் தெரிந்துகொள்ளப்பட்டவர்கள் இவர்களே.*

*மத்தேயு நம்மை ராஜாவாகிய இயேசுவிடம் அறிமுகப்படுத்துகிறார். இதுவே இவருடைய சுவிசேஷ புத்தகத்தின் 28அதிகாரங்களின் மையக்கருத்து.*

***மத்தேயு** 4:12-25, ராஜாவாகிய இயேசுகிறிஸ்துவின் அதிகாரப்பூர்வமான ஊழியம்.*

*பல ஆண்டுகளாய் தகுதிப்படுத்தப்பட்டு, யோவான் ஸ்நானகனின் ஊழியம் முடிந்த பின்பு, ஞானஸ்நானத்திற்கு பின்பு, சோதனைக்கு பின்பு, இயேசு தன்னுடைய அதிகாரப்பூர்வமான ஊழியத்தைத் துவக்குகிறார்.*

*கலிலேயாவில் வெளிச்சம் உதிக்கிறது.*

***வச.** 12, அவர் தன்னுடைய ஊழியத்தை சரியான நேரத்தில் துவக்குகிறார்.*

***வச.** 13 -16, சரியான இடமாகிய கலிலேயாவில் துவக்குகிறார்.*

***வச.** 17, சரியான செய்தியுடன் துவக்குகிறார்.*

***வச.** 18, அந்த பணியை செய்வதற்கு சரியான நபர்களை தெரிந்துகொள்ளுகிறார்.*

*இயேசு கலிலேயாக் கடலோரமாய் நடந்துபோகையில், மீன்பிடிக்கிறவர்களாயிருந்த இரண்டு சகோதரராகிய பேதுரு என்னப்பட்ட சீமோனும், அவன் சகோதரன் அந்திரேயாவும், கடலில் வலைபோட்டுக்கொண்டிருக்கிறபோது, அவர்களைக் கண்டு:*

*இயேசு தன் ஊழியத்தை தனியே செய்வதற்கு யோசிக்கவில்லை. அவர் அப்படி செய்யவும் இல்லை. அவரால் செய்திருக்கமுடியும் என்பது நிச்சயம். அவருக்கு வல்லமை இருந்தது. அவருக்கு அந்த அதிகாரமும் இருந்தது. ஆனால் அது அவருடைய திட்டமில்லை. அவர் அதை தனியே செய்ய தீர்மானிக்கவில்லை.*

*ஒரு வியாதியஸ்தனுக்கு மருத்து தேவை, உபதேசமல்ல. அவனுக்கு மருந்துகளின் பெயர்கள் வேண்டும்.*

*நன்கு உபதேசிக்கிறவர்களைப் பார்க்கிலும் மக்களுக்கு மருந்து கொடுத்து, அவர்களுடைய ஆத்துமாக்களுக்கு தேவையான மருந்தின் பெயர்களை அறிவிக்கக்கூடிய நபர்கள் இயேசுவுக்கு தேவை.*

*பன்னிரண்டு சீஷர்களை உள்ளடக்கிய இந்த மீட்புக் குழு எப்படி தெரிந்துகொள்ளப்பட்டது என்பது நமக்கு தெரியாது. ஆனால் இந்த பன்னிருவரும் இயேசுவினால் தனிப்பட்ட விதத்தில் அழைக்கப்பட்டார்கள் என்பது நமக்கு நன்றாய் தெரியும்.*

*அதில் நாம் ஏழுபேர்களுடைய சூழ்நிலையை அறியமுடியும். மற்ற ஐந்துபேர்களைக் குறித்து நமக்கு துல்லியமான தகவல்கள் இல்லையென்றாலும் அவர்களும் இயேசுவினால் அழைக்கப்பட்டவர்களே.*

*மனிதர்களைப் பிடிக்கும் இந்த மகா உன்னதமான பணியை செய்வதற்கு இயேசு தன்னோடு இருக்கும்பொருட்டு இந்த சீஷர்களை தெரிந்துகொள்ளுகிறார். தேவன் தன்னுடைய கூட்டாளிகளை எப்போதுமே கவனமாய் தெரிந்துகொள்ளுகிறார்.*

*பழைய ஏற்பாட்டில் தேவன் உலகத்தை ஆதாயப்படுத்தும்பொருட்டு இஸ்ரவேலைத் தெரிந்துகொளளுகிறார். அவர்களே அவருடைய மேன்மையை பறைசாற்றுவதற்காய் தெரிந்துகொள்ளப்பட்டவர்கள்.*

***ஏசாயா 49:3, அவர் என்னை நோக்கி: நீ என் தாசன்; இஸ்ரவேலே, நான் உன்னில் மகிமைப்படுவேன் என்றார்.***

*பழைய ஏற்பாட்டில் யூதர்களை அவர் தன் கூட்டாளிகளாய் நியமித்துக்கொள்கிறார். அவர்களில் எரேமியா, ஏசாயா, எசேக்கியேல், மற்றும் பலரை விசேஷமாய் தெரிந்துகொள்ளுகிறார்.*

*புதிய ஏற்பாட்டிற்கு வரும்போது இயேசு தன் கூட்டாளிகளை அதேபோன்று மிகவும் கவனமாய் தெரிந்துகொள்ளுகிறார்.*

***யோவான் 15:16, நீங்கள் என்னைத் தெரிந்துகொள்ளவில்லை, நான் உங்களைத் தெரிந்துகொண்டேன்; நீங்கள் என் நாமத்தினாலே பிதாவைக் கேட்டுக்கொள்வது எதுவோ, அதை அவர் உங்களுக்குக் கொடுக்கத்தக்கதாக நீங்கள் போய்க் கனிகொடுக்கும்படிக்கும், உங்கள் கனி நிலைத்திருக்கும்படிக்கும், நான் உங்களை ஏற்படுத்தினேன்.***

*இயேசு தன்னுடைய கூட்டாளிகளை மிகவும் கவனமாய் தெரிந்துகொண்டார்.*

***யோவான் 6:70, இயேசு அவர்களை நோக்கி: பன்னிருவராகிய உங்களை நான் தெரிந்துகொள்ளவில்லையா? உங்களுக்குள்ளும் ஒருவன் பிசாசாயிருக்கிறான் என்றார்.***

***யோவான் 13:18, உங்களெல்லாரையுங்குறித்து நான் பேசவில்லை, நான் தெரிந்துகொண்டவர்களை அறிவேன்; ஆகிலும் வேதவாக்கியம் நிறைவேறத்தக்கதாக, என்னுடனே அப்பம் புசிக்கிறவன் என்மேல் தன் குதிகாலைத் தூக்கினான்.***

***லூக்கா 6:12-13, அந்நாட்களிலே, அவர் ஜெபம்பண்ணும்படி ஒரு மலையின்மேல் ஏறி, இராமுழுவதும் தேவனை நோக்கி: ஜெபம்பண்ணிக்கொண்டிருந்தார். 13. பொழுது விடிந்தபோது, அவர் தம்முடைய சீஷர்களை வரவழைத்து, அவர்களில் பன்னிரண்டுபேரைத் தெரிந்து கொண்டு, அவர்களுக்கு அப்போஸ்தலர் என்று பேரிட்டார்.***

***இயேசு தன்னுடைய அப்போஸ்தலர்களை தெரிந்துகொள்ளும்போது அவர்களை மிகவும் கவனமாய் தெரிந்தெடுத்திருக்கிறார்.***

***இயேசு உங்களை மனிதர்களைப் பிடிக்க தெரிந்துகொண்டிருக்கிறார் என்று நம்புகிறாயா?***

*ஆம்.*

*கிறிஸ்துவுக்குள் இருக்கும் அனைவருக்கும் அந்த பொறுப்பு உள்ளது!*

*நாமெல்லோரும் சாட்;சிகளாயிருக்க வேண்டும்.*

*நாமெல்லோரும் கிறிஸ்துவைப் பிரசங்கிக்க வேண்டும்.*

*நாமெல்லோரும் கிறிஸ்துவைக் குறித்து பேச வேண்டும்.*

*நாமெல்லோரும் அறுவடைக்கு ஆயத்தமாயிருக்கிற நிலத்தில் களப்பணியாற்றவேண்டும்.*

*அப்போஸ்தலர் நடபடிகள் முழுவதிலும், திருச்சபை விரிவடையத் துவங்க, அனைவரும் இந்த பிரதான கற்பனையின் பங்காளிகளாய் மாறுவதைப் பார்க்கமுடியு .*

*ஆகையால் பழைய ஏற்பாட்டின் தீர்க்கதரிசிகளும், அப்போஸ்தலர்களும், புதிய ஏற்பாட்டின் சீஷர்களும் இயேசு கிறிஸ்துவுக்குள் வருகிற ஒவ்வொருவரும் இதில் சேர்க்கப்படுகின்றனர்.*

***லூக்கா 24:46-48, எழுதியிருக்கிறபடி, கிறிஸ்து பாடுபடவும், மூன்றாம்நாளில் மரித்தோரிலிருந்தெழுந்திருக்கவும் வேண்டியதாயிருந்தது; 47. அன்றியும் மனந்திரும்புதலும் பாவமன்னிப்பும் எருசலேம் தொடங்கிச் சகல தேசத்தாருக்கும் அவருடைய நாமத்தினாலே பிரசங்கிக்கப்படவும் வேண்டியது. 48. நீங்கள் இவைகளுக்குச் சாட்சிகளாயிருக்கிறீர்கள்.***

*அவருடைய நாமத்தில் மனந்திரும்புதலையும் பாவங்கள் நீக்கப்படுதலையும் தேசங்களுக்கு பிரசங்கிக்கவேண்டும். அது எருசலேமில் துவங்க வேண்டும். ஆனால் அதைத் தாண்டி பல தேசங்களுக்குப் பயணிக்கவேண்டும்.*

*நாமெல்லோரும் அந்த பயணத்தில் இணைகிறோம்.*

***அப்போஸ்தலர் 1:8, பரிசுத்தஆவி உங்களிடத்தில் வரும்போது நீங்கள் பெலனடைந்து எருசலேமிலும், யூதேயா முழுவதிலும், சமாரியாவிலும், பூமியின் கடைசிபரியந்தமும், எனக்குச் சாட்சிகளாயிருப்பீர்கள் என்றார்.***

***2 கொரிந்தியர் 5:20, ஆனபடியினாலே, தேவனானவர் எங்களைக்கொண்டு புத்திசொல்லுகிறதுபோல, நாங்கள் கிறிஸ்துவுக்காக ஸ்தானாபதிகளாயிருந்து, தேவனோடே ஒப்புரவாகுங்கள் என்று, கிறிஸ்துவினிமித்தம் உங்களை வேண்டிக்கொள்ளுகிறோம்.***

*பேதுருவும் அதையே சொல்லுகிறார்!*

***1 பேதுரு 2:9, நீங்களோ, உங்களை அந்தகாரத்தினின்று தம்முடைய ஆச்சரியமான ஒளியினிடத்திற்கு வரவழைத்தவருடைய புண்ணியங்களை அறிவிக்கும்படிக்குத் தெரிந்துகொள்ளப்பட்ட சந்ததியாயும், ராஜரீகமான ஆசாரியக்கூட்டமாயும், பரிசுத்த ஜாதியாயும், அவருக்குச் சொந்தமான ஜனமாயும் இருக்கிறீர்கள்.***

*இது பன்னிரண்டு அப்போஸ்தலர்களோடு துவங்கியது.*

*இது எருசலேமிலிருந்த ஆதித்திருச்சபைக் கடந்துபோனது.*

*யூதேயாவுக்கு கடந்துபோனது.*

*சமாரியாவுக்கும் கடந்துபோனது.*

*சமாரியாவைக் கடந்து உலகத்திற்கு பயணித்தது.*

*இன்று நம்மிடத்தில் கொடுக்கப்பட்டுள்ளது.*

*இது நம்முடைய பணி. நாமும் இயேசுவை பின்பற்றி மனிதர்களை பின்தொடர வேண்டும்.*

*இது நம்முடைய திருச்சபையில் நமக்கு மிகவும் பலமான வார்த்தை.*

*இயேசு அதைக் கட்டுகிறார், நாமெல்லோரும் அவரோடு இணைந்து வேலைசெய்கிறோம்.*

*நாம் பெரிய சத்தியங்களை கற்றுக்கொண்டோம். ஆம் நிச்சயமாகவே பெரியது!*

*நமக்கு நல்ல ஐக்கியம் இருக்கிறது. அது நல்லது!*

*நம்முடைய ஆசீர்வாதங்களினால் ஈர்க்கப்பட்டு அவற்றை அனுபவித்துக்கொண்டு, அழிந்துபோகிற ஆத்துமாக்களை நம்மால் முற்றிலும் மறந்து இருக்கமுடியும். நம்முடைய பாடல்களை இசைப்பதில் நாம் மும்முரமாய் இருக்கலாம், ஆனால் அவர்கள் அந்த*

*பாடலைக் கேட்கவேண்டாமோ? வெளியே என்ன நடக்கிறது என்பதை அறியாமல், நாம் இங்கேயே இருப்பதை அதிகம் விரும்புகிறோம்.*

*திருச்சபையின் மீதான அன்பு, கர்த்தருடைய வார்த்தை பொக்கிஷங்களின் மீதான அன்பு ஆகியவற்றால் ஈர்ப்படைந்திருக்கிற நம்முடைய இசையை உலகம் கேட்பதில்லை. என்ன ஒரு சோகம்!*

*95 சதவிகித மக்கள் ஒரு ஆத்துமாவைக் கூட கிறிஸ்துவுக்கு ஆதாயம் செய்ததில்லை.*

*திருச்சபையில் உனக்கு பிடித்த காரியங்களை நீங்கள் பற்றிக்கொள்வது தவறில்லை. ஆனால் நீங்கள் அதைக் கடந்து வெளியே போகவேண்டும்.*

*"ராக் ஆஃப் ஏஜஸ்" என்னும் சித்திரத்தில் பாறையின் மீது பதிக்கப்பட்ட சிலுவையை தன்னுடைய இரு கரங்களினாலும் பற்றியிருக்கிற ஒரு நபரை நாம் பார்க்கமுடியும். கடல் புயலின் சீற்றம் பாறையில் அடித்தபோது, அவர் அந்த சிலுவையைப் பிடித்துத் தொங்கினார். அதே போன்ற ஒரு சித்திரத்தை நானும் பார்த்திருக்கிறேன் என்று மூடி கூறுகிறார். ஆனால் நான் கண்ட அந்த நபர், புயலின் சீற்றத்தில் சிலுவையை தன் ஒரு கரத்தில் பிடித்திருக்கிறார், மூழ்கிக்கொண்டிருக்கிற நபரை தன்னுடைய மறுகரத்தில் இறுகப் பிடித்திருக்கிறார் என்றாராம்.*

*வச. 18,* **இயேசு கலிலேயாக் கடலோரமாய் நடந்துபோகையில், மீன்பிடிக்கிறவர்களாயிருந்த இரண்டு சகோதரராகிய பேதுரு என்னப்பட்ட சீமோனும், அவன் சகோதரன் அந்திரேயாவும், கடலில் வலைபோட்டுக்கொண்டிருக்கிறபோது, அவர்களைக் கண்டு:**

*கலிலேயா கடலோரமாய் நடந்துபோகிறார்.*

*"புனித பேதுருவின் மீன்." இந்த மீன் கலிலேயா கடலில் மட்டும் கிடைக்கக்கூடியது.*

*இது பார்ப்பதற்கு அசிங்கமாய் இருக்கும்; ஆனால் சுவை மிகுந்ததாய் இருக்கும்.*

*இது உலகத்தின் மிக அழகான இடங்களில் ஒன்று. ஒரு சிறிய ஏரி, அதின் அகலவாக்கில் கலிலேயாக் கடல்.*

*அதின் அகலவாக்கில் ஏழரை மைல் தூரமும் அதின் நீளவாக்கில் பதிமூன்றரை மைல் தூரமும் விரிந்திருக்கிறது.*

*பார்ப்பதற்கு முட்டை வடிவத்திலிருக்கும், மேலே மிகவும் விரிந்ததாயும் கீழே குறுகியதாகவும் அமைந்துள்ளது. கடல் மட்டத்திற்கு 618 அடி கீழே உள்ளது. அது 2000 அடி ஆழத்தில் அமைந்துள்ள சவக்கடல் வரை நீளுகிற பள்ளத்தாக்கின் உயர்ந்த பகுதியில் அமைந்துள்ளது. இது உலகத்தின் மிகவும் செழிப்பான பகுதிகளில் ஒன்று.*

*இயேசு வாழ்ந்த நாட்களில் அதின் கரையில், மக்கள் தொகைகொண்ட ஒன்பது பட்டணங்கள் அமைந்திருந்தது.*

*ஆனால் இன்று அங்கு திபேரியு என்ற ஒரே பட்டணம் மாத்திரமே இருக்கிறது.*

*240 படகுகளைக் கொண்ட அந்த மீன்பிடி தளத்தைப் பற்றி யோசிபஸ் எழுதுகிறார்.*

*8 மைல் அகலமும் 14 மைல் நீளமும் கொண்ட அந்த ஏரிக்கு இது அதிகமான படகுகள்.*

*இயேசு அந்த வழியாகவே நடந்து சென்று தன்னுடைய இரண்டு சீஷர்களை தெரிந்துகொள்ளுகிறார்.*

*பேதுரு என்று அழைக்கப்பட்ட சீமோன் மற்றும் அவருடைய சகோதரர் அந்திரேயா.*

*சீஷர்களின் பலவிதமான அழைப்புகளை நாம் வேதத்தில் பார்க்கமுடியும். ஒவ்வொரு சுவிசேஷ ஆசிரியரும் தங்களுடைய எண்ணங்களை பிரதிபலிக்கும் விதத்தில் அவைகளை பதிவுசெய்துள்ளனர். அவைகளை ஒரே வரிசையில் நாம் பார்க்கமுடியும்.*

*இயேசு குறைந்தபட்சம் ஐந்துமுறை இந்த சீஷர்களை தெரிந்துகொள்ளும் முயற்சியை ஏறெடுக்கிறார். அதில் ஒவ்வொன்றும் வித்தியாசமான அனுபவமாய் இருக்கிறது.*

- *நீங்களும் ஒரு காலத்தில் இரட்சிப்புக்கு அழைக்கப்பட்டீர்கள்.*
- *அதற்கு பின்பு, உங்களுடைய வாழ்க்கையில் ஒரு புதிய அர்ப்பணிப்பிற்கு நேராய் நீங்கள் கடந்துசென்றிருக்கலாம்.*
- *அதன் பின்பு, ஒரு குறிப்பிட்ட வழியில் இயேசுவுக்கு ஊழியம் செய்வதற்கு நீங்கள் அழைக்கப்பட்டிருக்கலாம்.*
- *இதன் பின்பு ஒரு குறிப்பிட்ட இடத்தில், ஒரு குறிப்பிட்ட ஊழியத்தைச் செய்வதற்கு நீங்கள் அழைக்கப்பட்ட தருணங்கள் ஏற்பட்டிருக்கலாம்.*

*தேவன் நம்மை பல கட்டங்களாய் வழிநடத்துகிறார். சீஷர்களுடைய விஷயத்திலும் அது உண்மையாகிறது.*

***கட்டம் 1***

*முதல் அழைப்பு யோவான் 1ஆம் அதிகாரத்தில் பதிவாகியுள்ளது.*

*அதை நீங்கள் **யோவான்** 1:38-52ல் பார்க்கமுடியும்.*

*இது இரட்சிப்புக்கு கொடுக்கப்பட்ட அழைப்பு. அந்திரேயா, யோவான், சீமோன், பிலிப்பு. நாத்தான்வேல் மற்றும் யாக்கோபு ஆகியோர் இரட்சிக்கப்படும்படிக்கு அழைக்கப்பட்டனர். அது ஆரம்பகட்ட அழைப்பு. அது "என்னைப் பின்பற்றுவதை விட்டுவிட்டு, அவரைப் பின்பற்றுங்கள்" என்று யோவான் ஸ்நானகன் சொன்ன ஒரு தருணம். அவர்கள் இயேசுவைப் பின்பற்ற துவங்கினர். இதுவே இரட்சிப்பிற்கேதுவான அழைப்பு.*

***கட்டம் 2***

*இந்த இரண்டாவது கட்டம் **மத்தேயு** 4:18ல் பதிவாகியுள்ளது.*

*இது மனிதர்களைப் பிடிக்கிற அழைப்பு. இவர்கள் இயேசுவைப் பின்பற்றத் துவங்கினார்கள். ஆனால் அது தற்காலிகமான ஒரு பின்பற்றுதலே. எல்லாவற்றையும்*

*விட்டுவிட்டு பின் தொடரும் முழுமையான தீர்மானம் இல்லை. அவர்கள் தற்போது இயேசுவைப் பின்பற்றத் தொடங்கினர். இந்த தருணத்தில், இந்த நாளில், இந்த நேரத்தில், இவர்கள் ஆத்துமாக்களை ஆதாயப்படுத்துவதற்கு அழைப்பு பெறுகிறார்கள். மனிதர்களைப் பிடிக்கும் அழைப்பைப் பெறுகிறார்கள். அவரைப் பின்தொடர்ந்து வருவதற்கு அழைக்கப்படுகின்றனர்.*

***கட்டம் 3***

*இது மூன்றாவது அழைப்பு.* ***லூக்கா*** *5ஆம் அதிகாரம்.*

*மத்தேயுவின் சம்பவத்திற்கு அடுத்தபடியாய் இது நிகழ்கிறது.*

*இது வித்தியாசமானது. சில ஒற்றுமைகளும் இருக்கிறது, அதேநேரத்தில் சில வித்தியாசங்களும் இருக்கிறது.*

***லூக்கா 5ஆம்*** *அதிகாரத்தில், அவர் அங்கு வரும்போது நிலைமை வித்தியாசமாயுள்ளது. அவர்கள் இன்னும் மீன்பிடித்துக்கொண்டிருக்கின்றனர். அதாவது, அவர்கள் இன்னும் தங்களுடைய முந்தின தொழிலை நிரந்தரமாய் விடவில்லை. அவர்கள் ஏற்கனவே தற்காலிகமாய் அவரைப் பின்பற்றத்துவங்கினர். தற்போது அவர்கள் அழைப்பில் இன்னும் உறுதிப்படப் போகிறார்கள்.*

*அவர் அவர்களைப் பார்த்து, "நீங்கள் மனிதர்களையும் பிடிக்கவேண்டும்" என்று சொல்லப்போவதில்லை; மாறாக, "நீங்கள் மனிதர்களை மட்டுமே பிடிக்கவேண்டும்" என்று கூறுகிறார். இது அடுத்த படிநிலை. இந்தமுறை அவர்* ***கென்னசரேத்*** *ஏரி என்று மறுபெயர்கொண்ட கலிலேயா கடல் புறமாய் நின்றுகொண்டிருக்கிறார். லூக்கா அங்ஙனம் இருந்ததினால் அதை ஏரி என்று அழைக்கிறார்.*

*அந்த ஏரியில் இரண்டு படகு நின்றுகொண்டிருந்ததை அவர் பார்க்கிறார். அதின் மீனவர்கள் அங்கு இல்லை. இயேசு அங்கு சீமோனின் படவில் ஏறுகிறார். அங்ஙனம் ஒரு மாற்றம் ஏற்படுகிறது. உடனே அனைவரும் அந்த படகிற்கு வந்துவிட்டனர்.*

*மத்தேயு சம்பவத்தைக் காட்டிலும் வித்தியாசமான ஒரு சம்பவம் இது.*

*"ஆழத்திலே தள்ளிக்கொண்டுபோய், மீன்பிடிக்கும்படி உங்கள் வலைகளைப் போடுங்கள்" என்று இயேசு சொல்லுகிறார். அங்கே ஒரு பெரிய அற்புதம் நிகழ்கின்றது. இது முற்றிலும் வித்தியாசமான ஒரு சம்பவம்.*

*இது அவர்கள் உண்மையான ஒரு அர்ப்பணிப்பிற்குள் வருவதற்கான நேரம். இயேசு அதை வலியுறுத்துகிறார்.*

***லூக்கா 5:10, சீமோனுக்குக் கூட்டாளிகளான செபெதேயுவின் குமாரராகிய யாக்கோபும் யோவானும் அந்தப்படியே பிரமித்தார்கள். அப்பொழுது இயேசு சீமோனை நோக்கி: பயப்படாதே, இதுமுதல் நீ மனுஷரைப் பிடிக்கிறவனாயிருப்பாய் என்றார்.***

*தேவனுடைய துணையில்லாமல் அவர்களால் தாங்களாகவே மீன்களை பிடிக்கமுடியவில்லை. அவர் மீன்களையும் கட்டுப்படுத்துகிறார்.*

*என்னையல்லாமல் நீங்கள் அவைகளைப் பிடிப்பதைக் குறித்து கவலைப்படவேண்டாம். இப்போதிலிருந்து நீங்கள் மனிதர்களைப் பிடியுங்கள்.*

***லூக்கா 5:11, அவர்கள் படவுகளைக் கரையிலே கொண்டுபோய் நிறுத்தி, எல்லாவற்றையும் விட்டு, அவருக்குப் பின்சென்றார்கள்.***

*இது வேறுவிதமான அர்ப்பணிப்பு.*

*இது நம்முடைய வாழ்க்கையின் ஒரு அங்கம்.*

*நீங்கள் ஆண்டவருக்குள் வந்தபின்பு, "நீங்கள் மனிதர்களைப் பிடிக்கவேண்டும்" என்று யாரேனும் உங்களிடம் சொல்லுவதற்கு காலதாமதம் ஆகாது. நீங்கள் மனிதர்களை பிடிக்கும் அந்த அழைப்பைக் கைவிட்டு வெகுநாட்கள் ஆகியிருக்கலாம்.*

***கட்டம் 4***

*மாற்கு 3ஆம் அதிகாரத்தில் இன்னொரு அழைப்பு கொடுக்கப்படுகிறது.*

*அவர்கள் இப்போது மனிதர்களைப் பிடிக்கும் வேலையை மட்டும் செய்யப் போகிறதில்லை. அவர்கள் அதிகாரப்பூர்வமாய் அப்போஸ்தலர்களாய் மாறப்போகின்றனர்.*

***மாற்கு 3:14**, அப்பொழுது அவர் பன்னிரண்டு பேரைத் தெரிந்துகொண்டு, அவர்கள் தம்மோடுகூட இருக்கவும், பிரசங்கம்பண்ணும்படியாகத் தாம் அவர்களை அனுப்பவும்,*

*அவர்கள் அற்புத அடையாளங்களை நடப்பிக்கவும் வியாதிகளை சுகமாக்கும் வல்லமையையும் பெற்றுக்கொள்கின்றனர். அவர்கள் இரட்சிப்பிலிருந்து பொதுவான அழைப்பைப் பெறுகின்றனர். தற்போது அற்புத அடையாளங்களை நடப்பிக்கும் வல்லமையை பெற்றுக்கொள்கின்றனர்.*

***கட்டம் 5***

***மத்தேயு** 10ஆம் அதிகாரத்தில் பதிவுசெய்யப்பட்டுள்ளது.*

***மத்தேயு 10:1, அப்பொழுது, அவர் தம்முடைய பன்னிரண்டு சீஷர்களையும் தம்மிடத்தில் வரவழைத்து, அசுத்த ஆவிகளைத் துரத்தவும், சகல வியாதிகளையும் சகல நோய்களையும் நீக்கவும் அவர்களுக்கு அதிகாரங்கொடுத்தார்.***

***மத்தேயு 10:7, போகையில், பரலோகராஜ்யம் சமீபித்திருக்கிறது என்று பிரசங்கியுங்கள்.***

***மத்தேயு 10:16, ஆடுகளை ஓய்நாய்களுக்குள்ளே அனுப்புகிறதுபோல, இதோ, நான் உங்களை அனுப்புகிறேன்; ஆகையால், சர்ப்பங்களைப்போலவினாவுள்ளவர்களும் புறாக்களைப்போலக் கபடற்றவர்களுமாய் இருங்கள்.***

***கட்டம் 6***

***பிரதான கற்பனை:***

*மத்தேயு 28:18-20, அப்பொழுது இயேசு சமீபத்தில் வந்து, அவர்களை நோக்கி: வானத்திலும் பூமியிலும் சகல அதிகாரமும் எனக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. 19. ஆகையால், நீங்கள் புறப்பட்டுப்போய், சகல ஜாதிகளையும் சீஷராக்கி, பிதா குமாரன் பரிசுத்த ஆவியின் நாமத்திலே அவர்களுக்கு ஞானஸ்நானங்கொடுத்து, 20. நான் உங்களுக்குக் கட்டளையிட்டயாவையும் அவர்கள் கைக்கொள்ளும்படி அவர்களுக்கு உபதேசம்பண்ணுங்கள். இதோ, உலகத்தின் முடிவுபரியந்தம் சகல நாட்களிலும் நான் உங்களுடனேகூட இருக்கிறேன் என்றார். ஆமென்.*

*யோவான் 20:21, இயேசு மறுபடியும் அவர்களை நோக்கி: உங்களுக்குச் சமாதானமுண்டாவதாக; பிதா என்னை அனுப்பினதுபோல நானும் உங்களை அனுப்புகிறேன் என்று சொல்லி,*

*கட்டம் 7*

*பரிசுத்த ஆவியானவரின் அபிஷேகம்.*

*லூக்கா 24:49, என் பிதா வாக்குத்தத்தம்பண்ணினதை, இதோ, நான் உங்களுக்கு அனுப்புகிறேன். நீங்களோ உன்னதத்திலிருந்து வரும் பெலனால் தரிப்பிக்கப்படும்வரைக்கும் எருசலேம் நகரத்தில் இருங்கள் என்றார்.*

*அப்போஸ்தலர் 1:8, பரிசுத்தஆவி உங்களிடத்தில் வரும்போது நீங்கள் பெலனடைந்து எருசலேமிலும், யூதேயா முழுவதிலும், சமாரியாவிலும், பூமியின் கடைசிபரியந்தமும், எனக்குச் சாட்சிகளாயிருப்பீர்கள் என்றார்.*

*அப்போஸ்தலர் 2ஆம் அதிகாரத்தில் பெந்தெகொஸ்தே நாளில் பரிசுத்த ஆவியானவர் கூடியிருந்த மக்கள் மீது வந்திறங்குகிறார். அவர்களுடைய ஊழியத்தை ஊக்குவிக்கிறார்.*

*இங்கு உங்களால் வளர்ச்சி மாற்றத்தைப் பார்க்கமுடிகிறதா?*

*நம்மிடத்திலும் அப்படியே தான்.*

*இயேசு சந்தித்து அவரை இரட்சகராய் ஏற்றுக்கொண்ட அந்த தருணத்திலிருந்து இந்த மாற்றங்கள் நம்முடைய வாழ்க்கையில் ஏற்படுகின்றது.*

*சில நாட்கள் கழித்து, ஆவியானவரின் தூண்டுதலின்பேரில் மனிதர்களை பிடிக்கிறவர்களாய் மாறுகிறோம்.*

*இன்னும் சில நாட்கள் கழித்து, எல்லாவற்றையும் விட்டுவிட்டு உங்கள் வாழ்க்கையை பயன்படக்கூடியதாய் மாறுகிறது.*

*காலம் வரும்போது தேவனுடைய வல்லமையை நீங்கள் உணர்ந்து, தேவனுடைய பணியை செய்வதற்கு நீங்கள் அதிகாரப்பூர்வமாய் அனுப்பப்படுகிறீர்கள்.*

*மத்தேயு 4:18 இரண்டாம் கட்டம்.*

*அவர் சீமோனையும் அந்திரேயாவையும் சந்திக்கிறார். அவர்கள் மீன்பிடிக்கிறவர்கள் என்பதினால் தங்கள் வலைகளை கடலில் போடுகின்றனர்.*

*அந்த நாட்களில் மூன்றுவகையான மீன்படிக்கும் முறை வழக்கத்திலிருந்தது.*

*அதில் முதல் வகை* ***தூண்டிலினால் மீன்பிடிப்பது****. ஒரு குச்சியில் மெல்லிய நூலை கட்டி மீன்பிடிப்பது. இது தூண்டிலைக் கொண்டு மீன்பிடிப்பது.*

*இரண்டாவது* ***வலையை வீசி மீன்பிடிப்பது****.*

*ஒரு படவில் நின்று, அல்லது இரு படவில் நின்றுகொண்டு வலையை வீசி மீன்பிடிக்கும் முறை. அந்த வலையின் நான்கு பக்கங்களிலும் கயிற்றால் கட்டப்பட்டு, அதை கடலில் தூக்கி வீசுவர். அந்த வலையின்; கீழ்ப்பகுதியில் எடை பொருத்தப்பட்டிருக்கும். ஆகையினால் அந்த வலை மிதக்காமல் நீரில் மூழ்கிவிடும். அப்போது படகை நகர்த்திக்கொண்டு போகும்போது, அவை மீன்களை வாறிக்கொண்டுவரும். அவர்கள் தங்கள் கைகளில் உள்ள கயிற்றை பிடித்து இழுக்கும்போது, மீன்கள் முழுவதுமாய் வலையில் சிக்கிக்கொள்ளும்.*

*இந்த மீன்பிடி வலையைப்பற்றி மத்தேயு 13ஆம் அதிகாரம் சொல்லுகிறது.*

*படகுகள் வலையை வீசி செல்லும்போது, அது ஒரு கூம்பு வடிவத்தை ஏற்படுத்துகிறது. இரண்டு படகிலும் வலையை இழுத்துக்கொண்டுபோகும்போது, வலை மீன்களால் நிரப்பப்பட்டு எடைகொண்டதாய் மாறும்போது, அந்த கூம்புவடிவம் தோன்றுகிறது. அவர்கள் வலையின் மறுபக்கத்தில் கயிற்றைக் கட்டி மீன்களோடு வலையை இழுக்கின்றனர்.*

*முன்றாவது முறை* ***வீசும் வலை****.*

*அதைத்தான் இங்கு இவர்கள் பயன்படுத்துகின்றனர். அவைகள் வீசுகின்ற வலைகள்.*

*இது வட்ட வடிவத்தில் ஒன்பது அடி நீளம் வரை இருக்கக்கூடியது. அவர்கள் இந்த வலையைப் பயன்படுத்துவதில் மிகவும் திறமைசாலிகளாய் இருந்தனர். அதை கடலின் கரையிலும் ஏரியின் முனையிலும் நின்று வீசுவது எப்படி என்பதை அவர்கள் நன்றாய் அறிந்திருந்தனர். கடலில் முழங்கால் வரை தண்ணீரில் நின்றுகொண்டு, வீச்சு வலையின் நுணியில் தொங்கவிடப்பட்டிருக்கம் எடைகள் எளிதில் தண்ணீருக்குள் மூழ்குவதற்கு வசதியாயிருக்கும். அது தண்ணீருக்குள் மூழ்கி மீன்களை சுற்றி வளைக்கும். அதன் பின்பு அவர்கள் கயிற்றை இறுக்கி, வெளியே இழுப்பார்கள்.*

*''****ஆம்பிபிள்ஸ்ட்ரான்****'' என்ற வார்த்தை, கரையில் நின்று தண்ணீரில் ஏதோ ஒன்றை தூக்கி வீசுவதைக் குறிக்கிறது.*

*''நீங்கள் மனிதரைப் பிடிக்கப்போகிறீர்கள்'' என்று இயேசு சொன்னார். இயேசு அந்த உருவகத்தைப் பயன்படுத்துகிறார். அவர்கள் அந்த வலையை வீசி கொத்துகொத்தாய் மீன்களைப் பிடிப்பது வழக்கம். அவர்கள் ஏதோ ஒரு மீனை பிடிக்கப்போவதில்லை, அநேக மீன்களை அவர்கள் பிடிக்கப்போகின்றனர்.*

*தேவன் சுவிசேஷ ஊழியத்தைக் குறித்து சிந்தித்தபோது, அவருடைய சிந்தையில் அநேகர் இருந்தனர்.*

***வச. 21, அவர் அவ்விடம் விட்டுப் போகையில், வேறே இரண்டு சகோதரராகிய செபெதேயுவின் மகன் யாக்கோபும், அவன் சகோதரன் யோவானும் தங்கள் தகப்பன் செபெதேயுவுடனே படவிலிருந்து, தங்கள் வலைகளைப் பழுதுபார்த்துக் கொண்டிருக்கிறபோது, அவர்களைக் கண்டு, அவர்களையும் அழைத்தார்.***

*இயேசு இங்ஙனம் நான்கு பேரைத் தெரிந்துகொள்கிறார். அவர்களைக் குறித்து அவர் ஓர் திட்டம் வைத்திருக்கிறார்.*

*அவர்கள் கடினமான சரப்பணிகள். அவைகள் சற்று முரடாய் இருப்பதில் ஆச்சரியமில்லை.*

*அது பேதுருவின் விஷயத்திலும் மற்றும் ஒருசிலரின் விஷயத்திலும் மிக நேர்;த்தியாய் பொருந்தும் என்பதில் ஐயமில்லை. அவர்களுக்கு அநேக பிரச்சனைகள் இருந்துள்ளது. அவர்களுக்கு ஆவிக்குரிய பார்வை இல்லாதிருந்தது. இயேசுவின் ஊழியத்தின் ஆரம்பத்தில் ஒரு சில மாதங்களாய் இயேசுவின் போதனையில் பெரும்பாலானவைகளை அவர்களால் புரிந்துகொள்ள முடியவில்லை.*

*இயேசு சில காரியங்களை மறைமுகமாய் பேசும்போது, அவர்கள் தங்கள் தலைகளை சொரிந்துகொண்டு, தங்களுக்கு விளங்கவில்லை என்று கூறுவர்.*

*ஆவிக்குரிய கோணங்களைக் குறித்து அவர்கள் வெகு குறைவாகவே அறிந்திருந்தனர்.*

*மத்தேயு 13 ஆம் அதிகாரத்தில் இடம்பெற்றுள்ள உவமை அவர்களுக்கு சொல்லப்படுகிறது. அவர்கள் அதை விளங்கிக்கொள்ளவில்லை. அவர்களால் அதை விளங்கிக்கொள்ள முடியவில்லை என்பதை இயேசுவும் குறிப்பிடுகிறார். அவர்கள் தலையை சொரிந்து அதை கண்டுபிடிப்பதற்கு பல நேரம் முயற்சி செய்தும் அவர்களால் முடியவில்லை. அதை அவர்களுக்கு வெளிப்படுத்தி விளக்கவேண்டியிருந்தது. அவர்கள் இன்னும் அநேகம் கற்றுக்கொள்ள வேண்டியிருந்தது.*

*மக்கள் மீது அனுதாபம் இல்லை.*

***மத்தேயு 14:15, சாயங்காலமானபோது, அவருடைய சீஷர்கள் அவரிடத்தில் வந்து: இது வனாந்தரமான இடம், நேரமுமாயிற்று; ஜனங்கள் கிராமங்களுக்குப் போய்த் தங்களுக்குப் போஜனபதார்த்தங்களைக் கொள்ளும்படி அவர்களை அனுப்பிவிடவேண்டும் என்றார்கள்.***

*அவர்கள் பரிதாபமற்றவர்கள்.*

*அவர்களிடத்தில் தாழ்மை கொஞ்சமும் இல்லை. அவர்களில் பெரும்பாலானவர்கள் பெருமை கொண்டவர்கள். மற்றவர்களோடு இருப்பதை விட இயேசுவோடு இருப்பதை அவர்கள் பெருமையாய் கருதியிருக்கவேண்டும் என்று நான் நினைக்கிறேன்.*

*ஒரு சிறுபிள்ளை முன்பாக வருகிறது.*

***மத்தேயு 18:2-3, இயேசு ஒரு பிள்ளையைத் தம்மிடத்தில் அழைத்து, அதை அவர்கள் நடுவே நிறுத்தி: 3. நீங்கள் மனந்திரும்பிப் பிள்ளைகளைப் போல் ஆகாவிட்டால், பரலோகராஜ்யத்தில் பிரவேசிக்கமாட்டீர்கள் என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்.***

*அவர்கள் மன்னிக்கும் குணாதிசயம் கொண்டவர்களும் இல்லை.*

***மத்தேயு 18:21, அப்பொழுது, பேதுரு அவரிடத்தில் வந்து: ஆண்டவரே, என் சகோதரன் எனக்கு விரோதமாய்க் குற்றஞ்செய்து வந்தால், நான் எத்தனைதரம் மன்னிக்கவேண்டும்? ஏழுதரமட்டுமோ என்று கேட்டான்.***

*அவர்கள் ஜெபக்கூட்டத்திலும் ஒழுங்கீனமாய் இருந்தனர். அவர்கள் அடிக்கடி தூங்கிக்கொண்டேயிருந்தனர்.*

***மத்தேயு 26:40, பின்பு, அவர் சீஷர்களிடத்தில் வந்து, அவர்கள் நித்திரைபண்ணுகிறதைக் கண்டு, பேதுருவை நோக்கி: நீங்கள் ஒரு மணி நேரமாவது என்னோடேகூட விழித்திருக்கக்கூடாதா?***

*அவர்கள் தைரியம் கொண்டவர்களும் இல்லை.*

*மேய்ப்பன் அடித்து நொறுக்கப்பட்டபோது, ஆடுகள் சிதறி ஓடின.*

*ஆவிக்குரிய கண்ணோட்டம் இல்லை, அக்கறை இல்லை, தாழ்மை இல்லை, மன்னிக்கும் சுபாவம் இல்லை, ஜெபத்தில் தரித்திருப்பதில்லை, மற்றும் அவர்கள் கோழைகளாகவும் இருந்தனர்.*

*"என் பின்னே வாருங்கள், உங்களை மனுஷரைப் பிடிக்கிறவர்களாக்குவேன்" என்று இயேசு அவர்களுக்குச் சொல்லுகிறார்.*

*நம்மைக் கொண்டு தேவனால் என்ன செய்ய முடியும் என்பதை இந்த வார்த்தை சொல்லுகிறது.*

*கொஞ்சமும் திறன் இல்லாத மூலப்பொருட்களைக் கொண்டு இயேசு நிற்கிறார்.*

*ஆனால் இயேசு அவர்களில் ஏதோ ஒன்றைப் பார்த்திருக்கிறார். அவர் என்ன செய்கிறார் என்பதை அவர் அறிந்திருக்கிறார். அவர்களின் திறனை வெளிக்கொண்டுவருகிறார்.*

*ஏன் இயேசு யூத ரபீமார்களை தன்னுடைய குழுவில் சேர்த்துக்கொள்ளவில்லை?*

*ஏன் மீனவக் கூட்டம்?*

*உலக ஞானத்தைக் காட்டிலும் மேலான ஒன்றை இயேசு சார்ந்துகொண்டார். மனித செல்வாக்குகளுக்கு அப்பாற்பட்ட, யதார்த்தமான மதங்களுக்கு அப்பாற்பட்ட, கல்வியறிவிற்கு அப்பாற்பட்ட, சடங்காச்சாரங்களுக்கு அப்பாற்பட்ட ஒன்றை சார்ந்திருந்தார்.*

***அப்போஸ்தலர் 4:13, பேதுருவும் யோவானும் பேசுகிற தைரியத்தை அவர்கள் கண்டு அவர்கள் படிப்பறியாதவர்களென்றும் பேதைமையுள்ளவர்களென்றும் அறிந்தபடியினால் ஆச்சரியப்பட்டு, அவர்கள் இயேசுவுடனே கூட இருந்தவர்களென்று அறிந்து கொண்டார்கள்.***

***வச. 19, என் பின்னே வாருங்கள், உங்களை மனுஷரைப் பிடிக்கிறவர்களாக்குவேன் என்றார்.***

*தேவன் இந்த கூட்டத்தை ஆரம்பத்தில் தெரிந்துகொள்ளவில்லை என்பது உங்களுக்குத் தெரியுமா?*

*அவர் அவர்களை தேர்ந்தெடுக்கவில்லை. அவர் அவர்களிடத்தில் வந்து ஒலிம்பிக் குழுவினரை தேர்வுசெய்யவில்லை. அதிக ஞானிகளை அவர் தெரிந்துகொள்ளவில்லை. அவர் சாதாரணமான மீன்பிடிப்பவர்களைத் தெரிந்துகொண்டார். அவர்கள் மக்களோடு மக்களாய் இருந்தவர்கள், தேவன் தன்னையும் மக்களோடே அடையாளப்படுத்திக் கொண்டார். எளியவர்களோடும், ஆவியில் எளிமையுள்ளவர்களோடுமே அவர் இருந்தார்.*

***அது பெரிய வாக்குறுதியல்லவா?***

*நான் உங்களை மனிதர்களைப் பிடிக்கிறவர்களாக்குவேன்.*

*யோவான் 1ஆம் அதிகாரத்தில் காணப்படுவதுபோல் இவர்கள் ஏற்கனவே விசுவாசிகளாய் இருந்தவர்கள். இது இரண்டாவது கட்டம்.*

*அவர்கள் செய்தியைப் பெற்றுக்கொண்டனர். அந்த செய்தி அவர்களுக்கு தெளிவான புரிதலை ஏற்படுத்தியது.*

*அவர் என்ன சொல்லுகிறார் என்பதை அவர்கள் தெளிவாய் புரிந்துகொண்டனர்.*

*இந்த யுக்தியை மீன்பிடிப்பதற்கு எப்படி பயன்படுத்துவது என்பதைக் குறித்து எப்போதாவது யோசித்திருக்கிறீர்களா?*

*மீன்பிடிக்கும் திறமைகளை மனிதர்களைப் பிடிக்க பயன்படுத்துவது எப்படி என்பதை எப்போதாவது யோசித்திருக்கிறீர்களா?*

*நன்றாய் மீன்பிடிப்பவர்களுக்கு சில திறமைகள் உண்டு.*

*முதலாவது:* ***பொறுமை***

*"என்னால் இவ்வளவு நேரம் நின்றுகொண்டு மீன்பிடிக்க முடியாது" என்று எவரேனும் சொன்னால் அவர் பொறுமையில்லாதவர். மீன்பிடிப்பவர்கள் காத்திருக்க பழகவேண்டும்.*

*மனிதர்களைப் பிடிப்பதில் தேறினவர்களாகவேண்டுமென்றால் நாம் பொறுமையாயிருக்கவேண்டும்.*

***இரண்டாவது: விடாமுயற்சி***

*அவர்கள் மீண்டும் மீண்டும் அந்த வேலையை செய்துவிட்டு திரும்பிவருவர்.*

***மூன்றாவது: தைரியம்***

*என்னுடைய படகு மிகவும் சிறியது, ஆனால் கடல் மிகவும் பெரியது.*

*மீன்களுக்காய் அவர்கள் பெரிய கடலை தைரியமாய் எதிர்கொள்ளவேண்டியுள்ளது.*

***நான்காவது: சரியான நேரம்***

*மீன்பிடிக்கும் நபர் சரியான நேரத்திற்காய் காத்திருப்பார். மீன்பிடிக்கும் நபரிடம் அவருடைய காரியங்களைக் குறித்து விசாரித்தால், அவர் எப்போது என்பதையும் எங்கு என்பதையும் மிகத் தெளிவாய் சொல்லுவார்.*

*ஆகையால், நன்றாய் ஆத்தும ஆதாயம் செய்யும் ஒரு நபர் தன்னுடைய சரியான தருணத்தையும் இடத்தையும் கவனமாய் தேர்வுசெய்கிறார்.*

*ஒரு நல்ல திறமையான மீனவன், மீன்களின் கண்களுக்குத் தென்படாமல் ஒளிந்திருக்கும்படி சொல்லுவதை நீங்கள் எப்போதாவது கவனித்திருக்கிறீர்களா?*

*ஒரு நல்ல ஆத்தும ஆதாயக்காரரும் தன்னை முன்னிலைப்படுத்த மாட்டார். அவர் தன்னை மறைத்து, தன்னுடைய நிழலையும் கூட காண்பிக்காமல், மற்றவர்களின் பார்வை இயேசுவின் மீது மட்டும் படும்படியாக நடந்துகொள்வார்கள்.*

*"உங்களை மனுஷரைப் பிடிக்கிறவர்களாக்குவேன்"*

*அவர்களை பயிற்றுவித்து, அவர்களுக்குப் போதிப்பதை தன்னுடைய அர்ப்பணிப்பாய் இயேசு கருதினார்.*

*மக்களை ஆதாயப்படுத்தும்படி பயிற்சிகொடுப்பதற்கு ஒரேயொரு வழி மட்டுமே உள்ளது. அவர்களை கூட்டிக்கொண்டுபோய் செய்துகாண்பிப்பது.*

*அவர்களுக்கு போதனை செய்யவேண்டும்.*

*சிலருக்கு தூண்டில் கொக்கியை எப்படி மாட்டுவது என்பது தெரியாது.*

*சிலருக்கு தூண்டிலை எப்படி சுற்றியிழுப்பது என்பது தெரியாது.*

*சிலருக்கு வலையை எப்படி வீசுவது என்பது தெரியாது.*

*இந்த அப்போஸ்தலர்களை பயிற்றுவிப்பதற்கு இயேசுவுக்கு எவ்வளவு காலங்கள் ஆனது?*

*மூன்று வருடங்கள்!*

***லூக்கா 10:1, இவைகளுக்குப் பின்பு கர்த்தர் வேறே எழுபதுபேரை நியமித்து, தாம் போகும் சகல பட்டணங்களுக்கும் இடங்களுக்கும் அவர்களைத் தமக்கு முன்னே இரண்டிரண்டு பேராக அனுப்பினார்.***

*இரண்டிரண்டு பேராக அவர்கள் வெளியே புறப்பட்டு போய், திரும்பி வரவேண்டும்.*

*கடைசியாய் மத்தேயு 28இல், "நான் உங்களை விட்டு புறப்படுகிறேன், இனி நீங்கள் சுயமாய் செய்யுங்கள். நீங்கள் பட்டம்பெற்றாகிவிட்டது" என்று கூறுகிறார்.*

***அப்பியாசம்:***

***இயேசு ஆத்துமாக்களை எப்படி ஆதாயம் செய்தார்?***

*அவர்கள் அவரைக் கவனித்தார்கள்.*

*அவர்களுக்கு 45 போதனைகளை செய்யவில்லை.*

*அவர் கிரியை செய்தார்!*

*அவர்கள் அவரைப் பார்த்தார்கள், கற்றுக்கொண்டார்கள்.*

*1. **ஆயத்தமாயிரு.***

*இயேசுவின் வாழ்க்கை வரலாற்றைக் கற்கும்போது, அவர் எப்போதும் ஆயத்தமாயிருந்தார் என்பதை நாம் பார்க்கமுடியும்.*

*மக்கள் எங்கு இருந்தார்களோ இயேசுவும் அங்கேயே இருந்தார். பாவிகள் எங்கேயிருந்தார்களோ, இயேசு எப்போதும் அங்கேயே இருந்தார்.*

*அவர் பாவிகளோடே எப்போதும் இருக்கிறார் என்றும் அவரை குற்றஞ்சாட்டினார்கள். செய்தி எங்கு அவசியப்படுகிறதோ இயேசு அங்கேயே இருக்கிறார்.*

*2. **பிடித்தவை ஒன்றுமில்லை***

*அவர் ஆடம்பரமான மக்களோடு நடந்துபோகவில்லை.*

*ஐசுவரியவான்களோடு நடந்துபோகவில்லை.*

*பிரபலமானவர்களோடு நடந்துபோகவில்லை.*

*மதம்சார்ந்த மக்களோடு நடந்துபோகவில்லை.*

*இயேசுவுக்கு யாருடைய சமுதாய அந்தஸ்தும் முக்கியமில்லை.*

*அவர் ஐசுவரியவானாயிருந்து யவீருவையும் சந்தித்தார். அதே நேரத்தில், விபச்சாரியாயிருந்த ஸ்திரியுடனும் உட்கார்ந்து பேசுகிறார்.*

*அவருக்கு பிடித்தவை என்று ஒன்றுமில்லை.*

*3. **உணர்திறன் கொண்டவராயிரு***

*மக்களை ஆதாயப்படுத்தும் அணுகுமுறையில் இயேசு எப்போதும் உணர்திறன் கொண்டவராயிருந்தார். திறந்த இருதயத்தை அவர் எளிதில் அடையாளம் கண்டுகொண்டார்.*

***திறந்த இருதயத்தைப் பார்ப்பது எப்படி என்று கற்றுக்கொண்டீர்களா?***

*மாற்கு 5ஆம் அதிகாரத்தில் கூட்டத்தின் நடுவில், அனைவரும் இயேசுவை நெருக்கிக்கொண்டிருந்த தருணத்தில், அவரால் நகரமுடியாத கூட்டம் என்று அவரே சொல்லுகிறார். அவர் நசுக்கப்படுகிறார், ஆனால் அவர் திரும்பி "என்னை தொட்டது யார்?" என்று கேட்கிறார்.*

*பெரும்பாடுள்ள ஒரு ஸ்திரி, ரபீமார்களின் வஸ்திரத்தில் எப்போதும் தொங்கக்கூடிய நான்கு தொங்கல்களில், ஒன்றைப் பற்றிக்கொண்டாள். அங்கே வேதனையோடு ஒரு ஸ்திரி இருக்கிறாள் என்பது அவருக்கு தெரியும். அந்த கூட்டத்திலிருந்து அந்த ஸ்திரியை இயேசு அழைக்கிறார். அந்த பெண்ணின் வியாதியை இயேசு குணமாக்குகிறார். அவர் மீது அவள் கொண்ட விசுவாசம் அங்ஙனம் பிரதிபலிக்கப்படுகிறது.*

*அவர் உணர்திறன் கொண்டவர். அந்த பெருங்கூட்டத்தில் திறந்த மனதுடன் இருக்கும் ஒருவரை அவர் கண்டுபிடிக்கிறார். ஆவியில் உணர்திறன் கொண்டவர்.*

***உங்களாலும் அதைச் செய்யமுடியும் என்பது உங்களுக்குத் தெரியுமா?***

*நீங்கள் ஆவியில் நடப்பவர்களாயிருந்தால், தேவனுடைய ஆவியானவர் திறந்த மனம்கொண்ட மக்களிடம் உங்களை வழிநடத்துவார் என்று நம்புகிறேன்.*

***4. பொது அறிக்கை***

*இயேசு மக்களின் பொதுவான அறிக்கையைக் கேட்டார். அவர் ஜனங்களை வெறுமனே திருப்பி அனுப்பவில்லை.*

***மாற்கு 5ஆம்** அதிகாரத்தில், இயேசு அந்த ஸ்திரியை அறிக்கையிடச் செய்தார்.*

*அவளால் போகமுடியவில்லை.*

*அவள் அவருடைய வஸ்திர தொங்கலைத் தொடுகிறாள்.*

*அவன் சுகமாக்கப்பட்டாள். ஆனால் அது போதுமானதில்லை.*

*அவள் நெடுநாளாய் அந்த வேதனையில் இருந்திருக்கிறாள் என்று மாற்கு சொல்லுகிறார். அநேக மருத்துவரினால் அவள் அதிக வேதனையை அடைந்திருக்கவேண்டும். மாற்கு அதைச் சொல்லுகிறார். ஆனால் மாற்கு சில குறிப்பிட்ட காரணங்களினால் அதை பதிவுசெய்யவில்லை.*

***மாற்கு 5:31, அவருடைய சீஷர்கள் அவரை நோக்கி: திரளான ஜனங்கள் உம்மை நெருக்கிக்கொண்டிருக்கிறதை நீர் கண்டும், என்னைத் தொட்டது யார் என்று கேட்கிறீரே என்றார்கள்.***

*இயேசு அந்த ஸ்திரியை அந்த கூட்டத்திலிருந்து வெளியே கொண்டுவருகிறார்.*

***மாற்கு 5:34, அவர் அவளைப் பார்த்து: மகளே, உன் விசுவாசம் உன்னை இரட்சித்தது, நீ சமாதானத்தோடேபோய், உன் வேதனை நீங்கி, சுகமாயிரு என்றார்.***

*அவளை விசுவாச அறிக்கையிடச் செய்யும்படி நடத்துகிறார். நாம் அதைச் செய்யவேண்டும்.*

*மக்களிடத்தில் திறம்பட செயல்படவேண்டுமென்றால், அவர்கள் தன் வாயினால் அவரை தேவன் என்று வெளிப்படையாய் அறிக்கையிடக்கூடிய ஒரு நிலைக்கு அவர்களை நடத்தவேண்டும்.*

***5. மென்மையாய் நேசிக்கிறவராயிரு.***

*யோவான் 8ஆம் ஆதிகாரத்தில் விபச்சாரத்தில் பிடிபட்ட ஒரு பெண்ணிடம் இயேசு என்ன செய்தார்?*

*மகதலேனா மரியாள் விஷயத்தில் என்ன நடந்தது?*

*மத்தேயு 8ஆம் அதிகாரத்தில் குஷ்டரோகியிடம் இயேசு என்ன செய்தார்?*

*அவர் பாவிகளை மென்மையாய் அணுகினார்.*

***6. நேரம்***

*இயேசு எப்போதுமே நேரம் எடுத்து காரியங்களைச் செய்தார்.*

*மாற்கு 5ஆம் அதிகாரத்தில் திரள்கூட்ட மக்களுக்கு மத்தியில், யவீரு வருகிறார். இயேசு அவரிடத்தில் நேரம் செலவழிக்கிறார். யவீரு அவருடைய மகளைக் குறித்த நீளமான கதையைச் சொல்லுகிறான். அதிகமான மக்கள் இருந்தபோதிலும் அவர் நேரமெடுத்துப் பேசுகிறார்.*

*இயேசு தன்னுடைய சீஷர்களை கீழ்க்கண்டவற்றுள் பயிற்சியளித்தார்.*

- *ஆயத்தமாயிருத்தல்,*
- *பிடித்தவை ஒன்றுமில்லை,*
- *உணர்திறன்,*
- *பொது அறிக்கை,*
- *மென்மையாய் நேசித்தல், மற்றும்*
- *நேரம்.*

*அவர்களின் பதில் என்ன?*

***வச. 22, உடனே அவர்கள் படவையும் தங்கள் தகப்பனையும் விட்டு, அவருக்குப் பின் சென்றார்கள்.***

*உடனடியான கீழ்ப்படிதல்.*

*கரையோரமாய் நடந்துபோகும்போது, இந்த அப்போஸ்தலர்களைப் பார்த்து, ''என்னைப் பின்பற்றுங்கள்'' என்றார். அவர்கள் பின்பற்றினர்.*

*அது அழைத்தவரைக் குறித்து ஏதோ ஒன்றை அறிவிக்கிறது!*

*அநேக சித்திரங்களில் பார்ப்பதுபோல, இயேசு பலவீனமானவர் இல்லை.*

*கீழ்ப்படிதல்.*

*அவர்களுக்கு ஆத்துமாக்கள் மீது அதிகமான பாரம் இருந்ததா?*

*எனக்கு சந்தேகமாயிருக்கிறது!*

*அவர்களுக்கு எதின் மீதும் வாஞ்சை இல்லை.*

*ஆத்துமாக்கள் மீது எப்படி தாகங்கொள்வது என்பதை அறிந்துகொள்ள விரும்புகிறீர்களா?*

*கீழ்ப்படிதலோடு துவங்குங்கள்.*

*அங்கிருந்துதான் எல்லாம் துவங்குகிறது.*

*கீழ்ப்படியுங்கள்.*

*கீழ்ப்படிதலே வாஞ்சை என்னும் தீயை பற்றவைக்கிற அக்கினி பொறி. ஆத்துமாக்கள் மீது பாரங்கொள்ளுகிறதற்கும், அழிந்துபோகிற ஆத்துமாக்களுக்காய் இருதயம் கொளுந்துவிட்டெறிய, முதலில் தேவனுக்குக் கீழ்படியவேண்டும். பிறகு கடந்துசென்று, தேவன் நம்முடைய கீழ்ப்படிதல் என்னும் ஒளியை கையில் எடுத்து, அதை காட்டுத்தீயின் மீது வீசுகிறார்.*

*முடிவுரை:*

*இது எங்கே துவங்குகிறது?*

*இது கீழ்ப்படிதலோடு துவங்குகிறது.*

*அது பற்றியெரியும் அக்கினியைத் துவக்கும் தீப்பொறி.*

*ஆகையால் விசேஷமான மக்களின் உதவி தேவனுக்குத் தேவை.*

*நம்முடைய திருச்சபையில் நன்கு பயிற்சிபெற்ற ஒரு குழுவினர் அவருக்குத் தேவை.*

*அவருக்கு வசதியான கிளப் தேவையில்லை.*

*அவருக்கு மனிதர்களைப் பிடிக்கிறவர் தேவை.*

*உங்களால் அதைச் செய்யமுடியுமா?*

*ஆம்!*

*எப்படி?*

*விசுவாசியாக இரு.*

*ஆயத்தமுள்ளவராக இரு.*

*இயேசுவுக்கு மக்களை ஆதாயப்படுத்துவதைக் கற்றுக்கொள்.*

*அது சுவிசேஷ ஊழியத்தில் பங்குகொள்வதென்றால், அதில் பங்குகொள்ளுங்கள். அது புதிய ஏற்பாட்டை வாசித்து, அதில் சுவிசேஷ ஊழியத்தைக் குறித்த வார்த்தைகளை கோடிட்டு வைப்பதென்றால், அதையும் செய்யுங்கள்.*

*கரிசனையுள்ளவர்களாயிருங்கள்.*

*கீழ்ப்படிதலுள்ளவர்களாயிருங்கள்.*

*புறப்பட்டுபோய் அதைச் செய்யுங்கள்.*